★ விலை ரூபா 1.25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

— வெள்ளி விழா ஆண்டு —

மலர் 25 மார்கழி 28 ரபி. ஆகி 8 இதழ் 331
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 12-1-84

## பார்த்தசாரதி தாயகம் திரும்பினர்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு சுமுகமான தீர்வொன்றை காணும்முகமாக சிங்களத் தலைவர்களையும், தமிழ்த் தலைவர்களையும் சந்தித்து, சர்வகட்சி மாநாடு கூட்டப்படுவதற்குக் காரணகர்த்தாவாக விளங்கிய இந்தியப் பிரதமரின் விசேட தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதி நேற்று மாலை தாயகம் திரும்பினர்.

திரு. பார்த்தசாரதி இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவை இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாகஐந்து தடவைகள் சந்தித்திருந்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு அநுரா பண்டாரநாயக்கா, தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமன், லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி கொல்வின்ஆர்.டி.சில்வா, பௌத்த மத குருமார், முஸ்லிம் சங்கங்களின் தலைவர்கள் ஆகியோரையும் திரு. பார்த்தசாரதி சந்தித்து, இலங்கைத் தமிழர் பிரச்னைகள் தொடர்பாகலந்துரையாடியது தெரிந்ததே.

திரு. பார்த்தசாரதி இம்மாதம் 3ம் திகதி மூன்றுவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். (வெ)

# பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஐந்து மணிநேர திடீர் ஊர்வலம்



நேற்றைய ஊர்வலத்தில் மாணவர்கள் அமைதியாக - ஊர்வலமாக வருவதை முதல் படத்திலும். ஸ்டான்லி வீதியில் வெலிங்டன் தியேட்டருக்கு அருகில் மாணவர்கள் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: தேவா)

(ஏ. வி. மாணிக்கம்)

பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் நேற்றுக் காலை நடத்திய திடீர் ஊர்வலத்தில் மூவாயிரத்துக்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்களும் மாணவிகளும் கலந்து கொண்டனர்.

இடம் பெயர்ந்த பல்கலைக் கழக மாணவர்கள் வடக்கு—கிழக்குப் பல்கலைக்கழகங்களில் தங்கள் பட்டப்படிப்பை மேற்கொள்ள வசதிசெய்துதருமாறு கோரி சாகும்வரை உண்ணாவிரதமிருப்பதற்கு ஆதரவு தெரிவித்து இந்த ஊர்வலம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை மூன்று தடவைகள் பொலிசார் தடுத்து நிறுத்தி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்யப்போவதாக எச்சரித்தபோதிலும் திட்டமிட்டபடி ஊர்வலம் குறித்த இலக்கை அடைந்தது.

நாச்சிமார் கோவிலடியை ஊர்வலம் சென்றடைந்தபோது, ஊர்வலத்தில் முன்னுக்குச் சென்ற சில மாணவர்கள் கொக்குவில் நோக்கிச் செல்ல முயற்சித்தினர். அவ்விடத்தில் ஏற்கனவே தரித்து நின்ற யாழ். பொலிஸ் அதிபர் ரி. இ. ஆனந்தராஜா, ஊர்வலத்துக்குப்பொறுப்பான மாணவர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து ஊர்வலம் ஏற்கனவேதிட்டமிட்டபடி இராமநாதன் வீதி ஊடாகப் பல்கலைக்கழகம் சென்றடைந்தது.

### ஐந்துமணிநேர ஊர்வலம்

யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து 8-30க்கு ஆரம்பமான ஊர்வலம் திரும்பவும் 1-30மணியளவில் அங்கு சென்றடைந்தது.

இடம்பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழகம், யாழ். பல் தொழில்நுட்பக் கல்லூரி, தனியார் கல்லூரிகள் ஆகியவற்றைச் சேர்ந்த மாணர்வகள் ஊர்வலத்தை நடத்தினர்.

பல்கலைக்கழகத்திலிருந்து புறப்பட்டு வளாகச் சந்தியை அடைந்து பலாலி வீதி வழியாக ஆரியகுளம் சந்திக்கண்மையில் ஊர்வலம் வந்துகொண்டிருந்தபோது பொலிசார் தடுத்து நிறுத்தி, கலைந்து போகுமாறு எச்சரிக்கைவிடுத்தனர். மாணவர்கள் உடனே

(8-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி - காங்கிரஸ் தினமும் சந்திப்பு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை தமிழ்க்காங்கிரஸ் தூதுக்குழு நேற்று முன்தினம் இரவு சந்தித்து நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தியது.

சர்வகட்சி மாநாட்டின்போது தமிழ்க்கட்சிகள் ஒரே கருத்தை வலியுறுத்துவதென்று இச் சந்திப்பின்போது முடிவு செய்யப்பட்டது.

கூட்டணித் தலைவர்கள் தங்கி இருக்கும் ஹோட்டலில் இடம்பெற்ற இச் சந்திப்பின்

(8ம் பக்கம் பார்க்க)

## ★ சர்வகட்சி மகாநாட்டில் அழைக்கப்பட்ட பத்து கட்சிகளும் கலந்துகொண்டன

(இ. கந்தசாமி)

சர்வகட்சி மாநாட்டிற்கு அழைக்கப்பட்ட பத்து அரசியல் கட்சிகளும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் நேற்று சர்வகட்சிமாநாட்டில் கலந்துகொண்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தூதுக்குழுவில்திரு கே.பி. ரத்னாயக்காவும், திரு. ரத்ன சிறிவிக்கிரமநாயக்காவும்இடம் பெற்றிருந்தனர்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தூதுக் குழுவிற்கு அக்கட்சியின் தலைவர்திரு.தினேஷ் குணவர்த்தன தலைமை தாங்கினர்.

சர்வகட்சி மகாநாட்டின் இரண்டாவது நாள் கூட்டம் நேற்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 6-30 மணிக்கு முடிவடைந்தது.

சர்வகட்சி மகாநாட்டின் நேற்றைய கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்காவும் கலந்துகொண்டார்.

முஸ்லிம்சங்கங்களின் சார்பில் கலந்துகொண்ட தூதுக் குழுவிற்கு அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் தலைமை வகித்தார்.

மக்கள் ஐக்கிய முன்னணி நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டபோதிலும் தொடர்ந்து இம்மகாநாட்டில் கலந்துகொள்வதுபற்றிப் பின்னர் தீர்மானிக்கப்படுமென்று அக்கட்சியின் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்றைய கூட்ட நிகழ்ச்சிநிரலைப் பொறுத்தே தனது கட்சி தொடர்ந்தும் மகாநாட்டில் கலந்துகொள்வதுபற்றித் தீர்மானிக்குமென்றும் அவர் கூறினர்.

சர்வகட்சி மகாநாட்டின் மூன்றுவதுநாள்கூட்டம் இன்று காலை 10-00 மணிக்கு ஆரம்பமாகும்.

8-ம் பக்கம் பார்க்க)

## சுங்க அலுவலக கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுங்கப்பகுதி தலைமையகத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொள்ளையில், பல லட்சம் ரூபா பெறுமதியுள்ள கடத்தல் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது!

வானொன்றைக் கடத்திய சிலரி சுங்க அலுவலகம் வந்து காவலாளிகளைக் கட்டி வைத்து

(8ம் பக்கம் பார்க்க)

## சகல மாணவர்களும் தொடர்ந்து பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த பல்கலைக் கழக தமிழ் மாணவர்களின் கோரிக்கையை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் ஒன்பது மாணவ - மாணவிகளுக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக சகல பீட மாணவர்களும் தொடர்ந்து இன்றும் நாளையும் தங்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருவது தெரிந்ததே.

கடந்த திங்கட்கிழமை முதல் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்துவருகின்றனர்.

உண்ணாவிரதமிருக்கும் 5மாணவர்களினதும் 4மாணவிகளதும் பெற்றோரும், சகோதரர்களும், உறவினர்களும் நேற்று முழுநாளும் உண்ணாவிரதமிருக்கும் இடத்தில்ஆதரவாக இருந்தனர். ஏராளமான பொதுமக்களும், மாணவர்களும் உண்ணாவிரதிகளைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தனர்.

இன்று நான்காவது நாளாக மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கின்றனர்.

நேற்றும் பிற்பகல் உண்ணாவிரதமிருக்கும் மாணவர்கள் களைப்புடனும், சோர்வுடனும் படுத்திருக்கக் காணப்பட்டனர். (மா)

## பல்கலைக்கழக தமிழ் மாணவர்பிரச்னை: ஜனதிபதி, கல்பகேக்கு 'அமிர்,' சிவா தந்தி பார்த்தசாரதியுடனும்சந்திப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்த பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்களின் பிரச்னையை உடனடியாகத் தீர்த்துவைக்குமாறு கோரி ஜனாதிபதிக்கும், பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஸ்டான்லி கல்பகேக்கும் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கமும், தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் நேற்றுத் தந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளனர். அத்தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"1977ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற சிங்கள மாணவர்களுக்கு இலங்கையின் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதுபோல், இடம் பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களுக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பல்கலைக்கழகங்களில் உடனடியாக இடமாற்றம் வழங்க வேண்டும்.

"யாழ். பல்கலைக்கழகத்தில் 5 மாணவர்களும், 4 மாணவிகளும் மேற்கொண்டு வரும்

( 8ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

நல்லினத் தென்னம்பிள்ளைகள் ரூபா 6/-வீதம் கொடுக்கப்படும். 10, கல்லூரி ஒழுங்கை, கொக்குவில். 097

நல்ல நிலையிலுள்ள ஹொண்டா C 90 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. ஒருவர் சொந்தப் பாவிப்பிலுள்ள புத்தம் புதியதாக கொள்வனவுசெய்யப்பட்டது. விபரங்களுக்கு: அசோகன், 66, புங்கங்குளம் றோட். யாழ்ப்பாணம். (3-5 மணிக்கிடையில் சந்திக்கவும்.) 085

தமிழ், ஆங்கில தட்டச்சு யந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: உதயன் புத்தக நிலையம், 127, பிரதான வீதி, பருத்தித்துறை. 10828

75சிசி லம்ப்ரெட்டா ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க இல. 113, பருத்தித்துறை வீதி, நல்லூர். யாழ்ப்பாணம், 074

வீட்டுத்தளபாடங்கள், அழகான செற்றிகள் கண்ணாடி அலுமாரிகள். றெசிங் ரேபிள், சாப்பாட்டறை மேசை ஆகியன விற்பனைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும். 16/1 1வது ஒழுங்கை, ரெம்பிள் றோட், யாழ்ப்பாணம் 071

## சேவை

நீர்வேலி வடக்கிலிருந்து பலாலிவீதி ஊடாக யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகளுக்கு புதிய மினிபஸ் சேவை நடைபெறவுள்ளது. தொடர்பு கொள்ளவும்: T. தியாகராசா, நீர்வேலி வடக்கு, மாசிவன் சந்தி, நீர்வேலி. 065

கொக்குவில், ஆனைக்கோட்டை, வண்ணார்பண்ணை மாணவ மாணவிகள் யாழ். பாடசாலைக்குச் சென்றுவர புதிய Toyota Hiace வான் சேவையில் ஈடுபடுத்தப்படும். தொடர்புகொள்க: க. தேவராசா, சக்தி அகம் கொக்குவில் மேற்கு, கொக்குவில். 094

## தவறிவிட்டது

எமது கார் ஸ்டார் ''றிம் பிளேற்'' (அளவு 14) சில தினங்களுக்குமுன்னர் வீதியில் தவறி வீழ்ந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். நோதேன் மோட்டர் வேக்ஸ், 44, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் சினிமா முன்பாக.) 096

## Memorial Service

A service of thanks giving for the life and work of my late husband and our loving father in SAMUEL RASANAYAGAM VAIRAMUTTU will take place at the C. S. I. Church, Tellippallai on the 14th of January 1984 at 4-00 p. m. All friends, relations and well wishers are cordially invited.

THAIYAL AND CHILDREN.
055

## WANTED

Book Keeper required for well Established Jaffna Firm. Should possess experience in Mercantile Accounts. Capable of preparing Monthly Trial Balance, Profit and Loss Accounts, Balance Sheet etc. Good handwriting essential. Forward handwritten Applications in English stating salary expected with copies of testimonials Advt. No: 108, C/o Eelanadu, Jaffna. 108

Marketing Representative required for well Established Jaffna Firm energetic and Established Jaffna Firm energetic and experienced Salesmen with good contacts capable of obtaining Orders for well known Office Equipments, Agricultural Machineries, Vehicles, Workman Tools etc. Cash Security essential Forward handwritten applications in English stating salary required with copies of recent testimonials. Advt. No: 107 C/o Eelanadu, Jaffna. 107

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof. K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 08?

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்திலிங்கம் செல்லத்துரை என்பவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்துக்களின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

மரணசாதன )
நியாயாதிக்கம்) இல. ரி/174

வைத்திலிங்கம் கைம்பெண் மங்கையற்கரசி, ''துவாரகா'', கல்வளை றோட், சண்டிலிப்பாய்.

மனுதாரர்

எதிராக

செல்லத்துரை ஞானனந்தா, நாவலர் றோட். யாழ்ப்பாணம்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு தை மாதம் 25ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்பாக தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1983ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ம் திகதி.

கோட்டுக்கட்டளைப்படி,

ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

வரைவு:
க. குணரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி.
10977

# ஐரோப்பாவின் பந்தோபஸ்து: அந்ரபோவ் எச்சரிக்கிறர்

மாஸ்கோ, ஜன. 11

''அமெரிக்க ஏவுகணைகள் ஐரோப்பிய மண்ணில் நிறுவப்படுவதால் வளர்வது ஐரோப்பாவின் பந்தோபஸ்தாக இருக்காது. அதற்குப் பதிலாக ஐரோப்பிய மக்களின் தலையில் மெய்யான ஆபத்தொன்றை அமெரிக்கா சுமத்தப்போகிறது'' என்று ஜனாதிபதி யூரி அந்ரபோவ் கூறினார்.

''தம் பிரதேசங்களில் அமெரிக்க ஏவுகணைகள் நிறுவப்படுவதற்கு சம்மதம் தெரிவித்த போது மேற்கு ஜேர்மனி, பிரிட்டன், இத்தாலி நாடுகளின் அரசுகள் ஆரம்பம் முதல், ஐரோப்பாவில் அணுவாயுதம் குறித்து பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய உடன்பாடொன்றை அமெரிக்கா விரும்பவில்லை என்று தெரிந்திருந்தன.

இவ்வாறன ஏற்பாடொன்று உருவாக்குவதை தடை செய்ய ஜெனீவா மகாநாட்டிலும் அதற்கு வெளியிலும் முடியுமானவற்றை அமெரிக்கா செய்து வந்தது. இதையும் அந்த அரசுகள் தெரிந்திருக்கும். அதாவது, சோவியத் யூனியனும் அதன் நேசநாடுகளும், அவற்றின் பந்தோபஸ்தைபாதுகாக்கவும் ஐரேரப்பாவில் மாமூலிலுள்ள பல அமெரிக்காவும் நேட்டோ ராணுவக் கூட்டணியும் உடைந்து விடுவதை தடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.'' என்று தெரிவித்தசோவியத்ஜனாதிபதி தற்போதைய நிலவரம் தொடர்பான அனைத்து அம்சங்களையும் பூரணமாக பரிசீலனை செய்த பின்னரேசிலமுடிவுகளை சோவியத் தலைமை எடுத்தது அணுவாயுத கட்டுப்பாடு பற்றிய உடன்பாடு முயற்சிக்கு அமெரிக்கா உலை வைத்துவிட்டது. ஆகவே இச்சூழலில் பேச்சுவார்த்தைகள் தொடர்வது அமெரிக்கா மற்றும் நோட்டோவின் நடவடிக்கைகளுக்கு வெறும் போர்வையாகவே அமையும். ஆகவே பேச்சுவார்த்தையில் தொடர்ந்து கலந்துகொள்வது சாத்தியமில்லை. என்றும் கூறினார்.

## பயிற்சி

மாலைநேர எலக்ரிக்கல் வயறிங் - ஓட்டோ வயறிங் இரண்டுமாத பயிற்சிகள் 16-1-1984 ல் ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11 B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 087

ஒருமாத வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிசம் வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பயிற்சி முடிவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழைப் பெறுவதோடு வீடு, வர்த்தக தொழில்நிறுவனங்களுக்கு நீங்கள்சுயமாகவே வயரிங்செய்யும் தகமையையும் பெறுவீர்கள். J. E. C. 37, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 076

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா சங்கரப்பிள்ளை என்பவரது மரணசாதன விடயத்தில்.

மரணமெய்தியவர்

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பொன்னம்பலம்

மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. 212

எதிராக

1. இராமலிங்கம் சிதம்பரப்பிள்ளை - நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
2. சின்னத்தம்பி பொன்னம்பலம் பெண் செல்லம்மா மட்டுவில் வடக்கு, மட்டுவில்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு தை மாதம் 16ந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி

ஆ. குணநாயகம்,
பதிவாளர்,

1984ம் ஆண்டு தை மாதம் 3ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது.
செ. இராமலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி
068

# பரந்தன்-முல்லைத்தீவுவீதியில் ஒரு பகுதி முற்றாக சேதம்!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக முற்றாக சேதமடைந்த பரந்தன்—முல்லைத்தீவு பாதையில் ஒரு பகுதி திருத்தப்படாமலே இருப்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

பரந்தன்—முல்லைத்தீவு பிரதான வீதியில் ஏழாம் மைல் கல்லுக்கு அண்மையில் கடந்த 20-ம் திகதி பெய்த பெருமழையினால் வீதி அடித்துச் செல்லப்பட்டுவிட்டது.

பூநகரி பெருந்தெருக்கள்

(7ம் பக்கம் பார்க்க)

# ''திட்டமிட்டு குடும்ப நலத்தை பேணவேண்டும்!''

(புலோலி)

''மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அளவான குடும்பமே வழிவகுக்கும் ஆதலால் திட்டமிட்டு குடும்பநலத்தைப்பேண வேண்டும். அப் போதுதான் குடும்பப்பொருளாதாரத்தைப் பாதுகாக்க முடியாது.''

இவ்வாறு இலங்கை குடும்பத் திட்டச்சங்க யாழ். குடும்பசுகநல செயற்குழுத்தலைவர்களுக்கான செய்முறைப்பயிற்சியிலே கலந்துகொண்டு உரையாற்றிய மந்திகை அரசினர் வைத்தியசாலை பொதுவைத்திய நிபுணர் டாக்டர் எஸ். யோகநாதன் குறிப்பிட்டார். பருத்தித்துறை தும்பளை சைவப்பிரகாசமகாவித்தியாலய மண்டபத்தில் இலங்கை குடும்பத் திட்டச்சங்க யாழ். மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு. ஏ. எஸ். பூவேந்திரன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. இலங்கை குடும்பத் திட்டச்சங்க செயலாற்று முகாமையாளர் திரு. பெனடி

(5-ம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழை திருச்சபை பாலர் பாடசாலை

அனுபவம் பயிற்சி பெற்ற ஆசிரியர்களினால் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும் பாலர் வகுப்புகளுக்கு 31-1-80க்கு முன்னர் பிறந்த பிள்ளைகள் அனுமதிக்கப்படுவார்கள்.

| | | |
|---|---|---|
| அனுமதிக்கட்டணம் | — | ரூபா 50/- |
| தவணைக்கட்டணம் | — | ரூபா 80/- |
| வகுப்புகள் ஆரம்பம் | — | 18-1-84 |

குருமனையில் பெற்ற விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 15-1-84**

(098)

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கீழ்கண்ட வேலைகளுக்கு ஆட்கள் உடனே தேவை.

★ லேபரர்கள் ★ மேசன்கள்

★ காப்பென்ரர்கள்

விபரங்களுக்கு உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**கிருஷ்ணா ஏஜென்சி**

1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24155

(102)

## KEEN INSTITUTE

வெளிநாடுகளில் இலகுவில் வேலைவாய்ப்புப் பெற உதவும் பின்வரும் வகுப்புகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

புதிய மாணவர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

★ TELEX OPERATORS (INTERNATIONAL)
சர்வதேச தொலைத் தொடர்பு சாதனங்களில் (SAGEM — SPES and SIEMENS) செய்முறைப் பயிற்சிகள்

★ RADIO OFFICERS (SHIP) P M G

★ ரெலிவிசன்

★ எலக்ரிக் வயரிங்

நவீன ஆய்வுகூட வசதிகளுடன் செய்முறைப் பயிற்சிகள்

பிரதான விரிவுரையாளர்
Mr. S KUMARASAMY,
(Electronics Engineer)

கிருபயடி ஒழுங்கை,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

(101)

# ஐரோப்பிய நாடுகளுக்கு ஆயுதஉபகரணங்கள் விநியோகத்தில் தடை! வார்ஸோமுடிவு

## 16 நாடுகளுக்கும் உடன் அறிவிப்பு

மாஸ்கோ, ஜன. 11 ஐரோப்பிய நாடுகளுக்கான இரசாயனப் பொருட்கள் ஆயுத உபகரணங்கள் விநியோகத்தில் தடைவிதிக்க வார்ஸோ நாடுகள் முடிவுசெய்துள்ளன.

வார்ஸோ நாடுகளின் இந்த முடிவு நேட்டோ நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேட்டோவின் 16 நாடுகளின் தூதுவர்களிடம் மாஸ்கோவில் வைத்து இத் தடை பற்றிய முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைத் தடுக்க இந்தயோசனை வகைசெய்யும் என்று வார்ஸோ நாடுகள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

நீண்டகாலமாக ஐ. நா. சபை இவ் விவகாரத்தில் அக்கறைசெலுத்தி வந்தபோதிலும் எதுவித முன்னேற்றமும் காணப்படாததாலேயே வார்ஸா நாடுகள் மிகத் தீவிரமாக ஆராய்ந்தபின்னர் இந்த முடிவை எடுத்துள்ளன.

வார்ஸோ நாடுகளின் இந்த முடிவு குறித்து நேட்டோ மிக விரைவில் கூடி ஆராயும் என்று கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (கு)

## ஜோர்டான் மன்னரின் இந்திய விஜயம்

(புதுடில்லி

ஜோர்டான் மன்னர் ஹுசைன் பதினைந்து நாள் விஜயம் ஒன்றைமேற்கொண்டு இம்மாதம் 30ம் திகதி புதுடில்லி வருகிறார்.

தமது பாரியாருடன் புதுடில்லி வரும் மன்னர், இந்திய குடியரசு விழாவிலும் தலைமைவிருந்தினராக கலந்து கொள்கிறார். (கு)

## வட்டு. கிழக்கில் 10 லட்சம் வீடமைப்புத்திட்டம்

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வட்டுக்கோட்டை கிழக்குகிராமோதய சபைப் பகுதியில் அரசின் 10 இலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் ஆரம்பவைபவம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

வட்டுக்கோட்டை இந்துகல்லூரி மண்டபத்தில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற இந்த வைபவத்திற்கு வட்டுக்கோட்டை கிழக்கு கிராமோதயசபைத்தலைவர் சைவப்புலவர் நா. க. தங்கரத்தினம் தலைமைவகித்தார்,

கிராமசேவை உத்தியோகத்தர் திரு. ஆ. முருகேசு உட்பட மற்றும் சிலர் இதில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். விசேடசேவை அலுவலர் திரு. வே. த. கதிர்காமநாதன் நன்றியுரை நிகழ்த்தினார்.

## "உலக அமைதிக்கு பேராபத்து!"

### சோவியத் பாராளுமன்றம் கவலை

மாஸ்கோ ஜனவரி 11

ஏகாதிபத்திய சக்திகளின் குறிப்பாக அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகளின் அதிகரிப்பினாலும் ஆக்ரமிப்பு நடவடிக்கைகளினாலும் உலக நிலைமை மோசமாக உக்கிரமடைந்துள்ளது குறித்து சோவியத்யூனியனின் சுப்ரீம் சோவியத் [சோவியத் பாராளுமன்றம்] கவலை தெரிவிக்கிறது'' என்று சர்வதேச நிலவரமும் சோவியத் நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையும் குறித்து'' என்ற தலைப்பில் கிரெம்ளினில் நடைபெற்ற சோவியத்யூனியனின் சுப்ரீம் சோவியத் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கூறுகிறது.

''சர்வதேச நிலைமையில் இன்றுள்ள சிக்கல்களை விடுவிக்க சகலவழிகளிலும் உழைக்கும் சோவியத்யூனியன், சமாதானத்தைப் பாதுகாத்து உறுதிப்படுத்தவும், ஆயுதப் போட்டியை கட்டுப்படுத்தவும், நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் ஆழப்படுத்தவும் முரண்பாடற்ற கொள்கையை அது உறுதிப்படுத்துகிறது. சோவியத் யூனியனின் பாதுகாப்புத்திறனை வலுப்படுத்தவும் சோவியத் மக்களினதும் அதன் நேசநாடுகளினதும் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்தவும் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் எடுத்துள்ள நடவடிக்கைகளை சுப்ரீம் சோவியத் ஆதரித்து அங்கீரிக்கிறது'' என்று மேற்படி தீர்மானம் கூறுகிறது.

''ஏகாதிபத்தியம் கடைப் பிடிக்கும் மூர்க்கமான கொள்கை உலகை பேரபாயத்துக்குள்ளாக்கும் என்பது குறித்து மனிதகுலம் எச்சரிக்கையடைந்துள்ளது. இக் கொள்கை இன்று சர்வதேச பந்தோபஸ்துக்கு ஓர் அடித்தளமாகவிருக்கும் இராணுவ சமநிலையை சீர்குலைப்பதாக வுள்ளது. புதிய அமெரிக்க அணுவாயுத ஏவுகணைகளை மேற்கு ஐரோப்பாவில் நிறுவுவதன்மூலம், ஜெனிவாப் பேச்சுக்களை தொடரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது'' என்றும் அத்தீர்மானம் கூறுகிறது.

## டென்மார்க் பொதுத் தேர்தலில் வலதுசாரி கட்சி முன்னணியில்!

### அறுதிப்பெரும்பான்மை எந்தக்கட்சிக்குமில்லை

லண்டன் ஜன 11

டென்மார்க்கில் நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சியுமே அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெறவில்லை.

வலதுசாரிக் கட்சி 42.8 வீத வாக்குகளைப்பெற்று முன்னணியில் இகழ்கின்ற போதிலும் தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலையில் உள்ளது.

சோஷலிச கோட்பாடுகளைக் கொண்டிராத மாற்றுக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சியமைக்கவேண்டிய சூழ்நிலையில் வலதுசாரிக்கட்சி இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (கு)


யாழ்.நகரில் சிறப்பான பயிற்சி

SPECIAL ENGLISH COURSES

யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர்கள்

திரு. T. N. பஞ்சாட்சரம்,
K. சபாநாயகம்
R .முத்துலிங்கம் ஆகியோரின் இணைந்த சேவை

| பாடநெறிகள் ★★★ | ஆரம்பம் |
| --- | --- |
| BASIC English (4 மாதங்கள்) | 21-1-84 |
| SPOKEN English (3 மாதங்கள்) | 16-1-84 |
| INTEGRATED English (6 மாதங்கள்) | 21-1-84 |
| TOEFL/ELT (3 மாதங்கள்) | 16-1-84 |

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்

விபரங்களுக்கு:- நேரில்/தபாலில்

ASTAN INSTITUTE

166/1, HOSPITAL ROAD, JAFFNA


# வெளிநாட்டு நன்கொடை: அரச அனுமதி வேண்டும்!

## இந்திய அரசாங்கம் தீர்மானம்

(புதுடில்லி)

வெளிநாட்டு நன்கொடை சட்டத்தைத் திருத்தியமைக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டு நன்கொடைகளில் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதே இந்த திருத்தத்தின் நோக்கமாக இருக்கும்.

அரசியல் கட்சிகள் மட்டுமன்றி இதர அரசியல் சங்கங்கள், தொழிற்சங்கங்கள் சமூக ஸ்தாபனங்கள் எதுவும் அரசாங்கத்தின் முன் அனுமதி பெறாமல் வெளிநாட்டிலிருந்து நன்கொடை எதுவும் பெற முடியாது. அரசின் அனுமதியுடன் பெறப்படும் நன்கொடைகள் மீதான செலவுக் கணக்கையும் அரசிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்பதே இப் புதிய திருத்தத்தின் முக்கிய திருத்தமாகும்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி தலைமையில் நேற்று பாகநீண்டநேரம் ஆராய்ந்த முன்தினம் கூடிய மத்திய பின்னர் இந்த முடிவை எடுத்அமைச்சரவை இது தொடர் தது. (கு)

## இந்தியா பயணமானர்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தகுதிவாய்ந்த அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் இந்தியா பயணமாகியுள்ளார் இச்சபையின் பதில் தகுதிவாய்ந்த அதிகாரியாக திரு. ஆர். ராஜேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். (வெ)


யாழ். சென்றல் கிளினிக்

YARL CENTRAL CLINIC

180, ஆஸ்பத்திரி வீதி-யாழ்ப்பாணம்.

போன்; 23366

(C. S. K சந்திக்கு அருகாமையில்)

வைத்தியசாலையும் வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையமும்

★ இங்கு சகலவைத்தியசிகிச்சைகளும் நடைபெறும்.

★ சகல வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகள் பெறுவதற்கு இவ் வைத்திய நிலையம் வசதி செய்து கொடுக்கும்.

★ ஆய்வு கூட பரிசோதனைகளும் செய்து கொடுக்கப்படும்.

★ இவ் வைத்திய நிலையம் தினசரி காலை 7 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை (விடுமுறை நாட்கள் உட்பட) திறந்திருக்கும்.

குறிப்பு! ஞாயிற்றுக்கிழமைகளில் குடும்பநல ஆலோசனைகள் (Family Planning) இலவசமாக அளிக்கப்படும்.

064

### மணிவாக்கு

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே.

— புறநானூறு.

## நமது நோக்கு

### பெருக்கவிடாது தீர்த்து வைக்க

இன்று பல வழிகளிலும் உயிரிழந்த தமிழ்மக்கள் பற்றிய கவலை பசசையாயிருக்கும்வேளையில் பல்கலைக்கழக மாணவர்கள் 'சாகும்வரை உண்ணாவிரதம்' எடுத்திருக்கும் சபதம் தற்கொலையாகட்டும் என்று எவரும் வாளாவிருக்கமுடியுமா?

'புத்தகப் பூச்சிகள்' போராட்டத்தில் வலிமை பெற்றுள்ளன என்றொரு கட்டுரை ஒரு ஆங்கிலத் தினசரியில் வெளிவந்திருக்கிறது. 'புழுக்களுமே போராடமுடியும்' என்றொரு ஆங்கில வாசகத்தில் அமைந்த கருத்து அவ்வெழுத்தாளரின் கருத்து,

நிலைமை மோசமானால், தப்பும்வழி வேறெதுவுமில்லாவிட்டால் இந்தப் பழமொழி பொருத்தமாகும். ஆனால் யாழ்ப்பாண மாணவர்களை வெறும் 'புத்தகப் பூச்சிகள்' என்று குறிப்பிடுவது மகாதவறென்று கண்டிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த கலவரத்தில் எரிக்கப்பட்ட வீடுகளில் புத்தகங்கள் சாம்பலாகும்போது எழுப்பப்பட்ட கோஷம் 'புத்தகம் படிக்கும் மாணவர்களுக்கு (தமிழ்) நல்ல பாடமாக இருக்கட்டும்'' என்பது நினைவுக்கு வருகிறது

வடபகுதி மாணவரின் உயர்கல்வி எங்கள் இடர்கள் அனைத்துக்கும் தலைமை தாங்குகிறது. ஆனால் அது தான்முக்கிய பிரச்னை என்பதல்ல. அதனைத்தான் சர்வகட்சி மாநாடு தீர்த்து வைக்கவேண்டியது என்பதல்ல.

'மூளாத் தீப்போல் உள்ளேகனன்று, வந்த வினைக்கு கோரவடிவமளித்தது பல்கலைக்கழகப் பிரவேசம்; பலவருடம் வளர்ந்து வந்த வினைஇது.

இன்று அது ஒரு புறமிருக்க இடம்பெயர்ந்த மாணவர்கள், இக்கதிக்காளான மற்றவர்களைப் போல பழைய இடங்களுக்குத் திரும்ப அஞ்சுகிறார்கள்; இது ஒருதலைப்பட்ட அச்சம் அல்ல; சிங்கள மாணவர்கள் தமிழ் மாநிலங்களிலிருந்துவெளியேறிவிட்டனர்; கலவரம் பெருக்க முன்னரே யாழ்ப்பாணத்தில் வாழும் சிங்கள மக்கள் தத்தம் இடங்களுக்கு பாதுகாப்பாக அனுப்பப்பட்டனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம், தமிழ் பல்கலைக்கழகம் அல்ல என்பதை நாம் என்றும் வற்புறுத்துகின்றோம்; மிகப் பிந்தி ஆரம்பமான இந்த உயர்கல்வி நிலையம் பத்து வருடம் பன்முகப்பட்டவிருத்தி காணாததற்கு என்ன காரணம்?

கணிசமான சிங்களமாணவர் பொறியியல், விவசாயம் போன்ற துறைகளுக்கு யாழ்ப்பாணம் வர வேண்டிய அவசியமிருந்தால் இத்துறைகள் இன்றும் துவங்காதிருக்குமா?

எனவே இவ்வித படிப்புகளுக்கு தெரிவு செய்யப்பட்ட சிங்கள மாணவர்கள் அவற்றைத் தொடர்ந்து படிக்கும் சிங்கள மாணவர் எவருக்கும் இடம் பெயர்ந்த நிலை இல்லை.

இந்தியாவில் படித்த சிங்கள மாணவர்களே சிலர் பாதுகாப்பு காரணமாக இலங்கை வந்துவிட்டனர் என்கிறது செய்தி.

'பாதுகாப்பு' என்பது ஒருவரின் மனோநிலையைப் பொறுத்தது. பேராதனையில் நடைபெற்ற சம்பவங்களை அறிந்தவர் இன்று அங்கு பாதுகாப்பு உறுதியாய் விட்டது என்று சொல்லலாமா? சொன்னபோதும் அதில் நம்பிக்கை கொள்ள மாணவருக்கு நியாயம் உண்டா?

எனவே இளம் உள்ளங்களில் ஏற்பட்டிருக்கும்நியாயமான மனத் துயரத்தை பாகுபாடின்றி தீர்த்துவைக்கும் பொறுப்பு இன்றைய கட்டத்தில் ஜனாதிபதிக்கு உண்டு.

இன்றுநடைபெறும்வட்டமேசையைக் குழப்பும்நோக்கம் இப்பிரச்னையில் இருக்கவே இருக்காது. அம் மகாநாட்டின் சுமுகமான முடிவுகள் பல்கலைக்கழகப் பிரச்னைக்குஉதவவும் முடியும்.

ஆனால் இது தற்காலிகமானது. பாதுகாப்பளிக்க, அரசு தமிழ் பிரதேசங்களில் உள்ள இரு வளாகங்களில் இயலுமளவிற்கு இம் மாணவர்களுக்கு இடமளிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, உண்மையிலே தெறிகெட்டு செய்வதென்னவென்றறியாத மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தகுந்தவழிகாட்ட முன்வர வேண்டும்.

பல்கலைக்கழகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைந்துவிட்டதால் அதற்கு முழுமையளிக்கும் மற்றைய துறைகள் தாமதமின்றித் தொடங்கும் உறுதி மொழி இன்றைய நெருக்கடிக்கு ஓரளவுக்கு உதவும்.

எவ்வகையிலும் இத்தகைய உண்ணாவிரதம் திசை திரும்பவோ அல்லது புதுக் கேடுகளை வரவழைக்க விடுவதோ புத்திசாலித்தனமாகாது.

---

★ சுவாமி விவேகாநந்தரின் 121வதுஜயந்திதினம்இன்று

# "பிரபஞ்சத்தில்மிக உயர்ந்த ஜீவன் மனிதன்"

(சுவாமி விவேகாநந்தரின் 121-வது ஜயந்தி விழா இன்று பல இடங்களில் கொண்டாடப் படுகின்றது. அதனை முன்னிட்டு இக் கட்டுரை வெளியாகிறது.)

பாரதம் பெற்றெடுத்த தலைப்புலவர்களில் சுவாமி விவேகாநந்தர் ஒருவராவர். இவர் 1983-ம் ஆண்டு தைமாதம் 12-ம் திகதி சிம்லாவிலுள்ள புகழ்பெற்ற குடும்பத்தின் புத்திரராக அவதரித்த ஒளிவிளக்கு.

பாரத நாடு சிறந்த தத்துவங்களையும் சமய நெறிகளையும் பலருக்கு அள்ளி வாரியது என்பதற்கு உலக அறிஞர்களும் சான்று பகருவார்கள். இந்நூற்றூண்டு கண்ட சீன பேரறிஞரும் தத்துவமேதையுமான லின்-யு-டாங் கூறியதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். 'இன்றைய உலகில் இந்தியாவில் தான் சமய வாழ்வு உயிருடன் இருப்பதைக் காண்கின்றோம். ஒருவன் ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தைக் கொடு' என்று யேசுநாதரின் போதனையை ஒரு தேசிய இயக்கமாக பொது மக்கள் செயற்படுத்த முடியுமானால் அது இந்தியாவை விடவேறுஎந்த எந்த நாட்டிலும் இல்லாத காரியம்' (இன்று இந்த உண்மையை இந்திய மக்களின் பொது வாழ்வில் குறிப்பாக இந்து மக்களின் பொது வாழ்வில் நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. இப்படியான சூழ்நிலையை உருவாக்கிய ஞானிகளுள் சுவாமி விவேகாநந்தரும் ஒருவராவர்.

'வேதாந்த தத்துவத்தின்படி பிரபஞ்சத்தில் மிக உயர்ந்த சீவன் மனிதனுவான். இந்த பூமி மனிதனின் செயற்பாட்டிற்கு மிகப் பொருத்தமான இடமாகும். இங்கு மனிதன் பூரணத்துவம் அடைய வாய்ப்புகள் உண்டு' தெய்வங்களோ அல்லது தேவதைகளோ அவர்களை எப்படிப் பெயர் சொல்லி அழைத்தாலும், பூரணத்துவமடைய வேண்டுமாயின் மனிதர்களாகப் பிறக்க வேண்டும். இவ்வுலகம் தான் மிகச் சிறந்த சந்தர்ப்பத்தை மனித வாழ்வுக்கு அளிக்கின்றது' என சுவாமிஜி கூறியுள்ளார். இவர் ஒரு தத்துவத்தைப் போதிப்பதில் திருப்தி காணாமல் தானே வாழ்ந்து காட்டினார். தனது குருவாகிய ஸ்ரீ இராமகிருஷ்ணருடைய உயரியநெறிகளுக்கமைய வாழ்ந்தும் காட்டினார்.

மனிதன் இயற்கையாகத் தெய்வீகத் தன்மையுடையவன். மனிதனில் இருக்கும் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்த சமயம் ஏன்? என்ற கேள்விக்கு சுவாமி சுருக்கமாக விடைதந்துள்ளார். விழிப்பை ஏற்படுத்துவது சமயம். சிறந்த வாழ்வுக்கு வழிகாட்டுவது சமயம். மனிதனில் காணப்படும் நற்குணங்களை - அன்பு அறம், கருணை, கண்ணியம், துணிவு, நேர்மை போன்றவற்றை வெளிக்காட்ட உதவுவது சமயம், கொலை, கொள்ளை, கொடுமை, கொடூரம், வெகுளி, பொறாமை, சுயநலம் அநாகரிகம், பேராசை, பகை, பூசல், பிரிவு, அழிவு ஆகிய இழிய குணங்கள் உள்ளத்தை அணுகவிடாமல் தடைசெய்வது சமயம்.''

ஆரோக்கியத்துக்குரிய அடிப்படை விதிகளை நாம் மீறுவோமேயானால் உடல் நலம்குன்றி வேதனைக்குள்ளாகின்றோம். அதேபோன்று சமய நெறிகளை மீறுவோமேயானால் நாம ஆன்மீக பலம்பெற முடியாது. சுக்கானில்லாத கப்பல் போல் நட்டாற்றில் தவிக்க வேண்டும். நற்பண்புகள் நற்செயல்கள் எம்மிடம் மறைந்திருக்கின்ற தெய்வீகத் தன்மையை வெளிக்காட்டத்தவறுவதில்லை. இவ்வுணர்வு சமயத்தின் மூலக்கல்.

''சமயத்தை மனித சமுதாயத்திலிருந்து அகற்றினால் எஞ்சியிருப்பதென்ன? மிருகங்கள் நிறைந்த காடு'' என சுவாமிஜி கூறியுள்ளார். உயர்வு, தாழ்வு, ஏழை, பணக்காரன், பலமற்றவன் என்ற வேறுபாடுகளை அகற்ற சமயம் துணைபுரிகின்றது. சமயத்துக்கு முன் எல்லோரும் சமம் என்ற உணர்வை

பூ. க. இராசரத்தினம்

(5-பக்கம் பார்க்க)

---

### இடம் பெயர்ந்த மாணவர் போராட்டம்

## மக்கள் கருத்து

ஜூலை வன்செயல்களுக்கு முன்னர் தொடக்கமே தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுத் தொடர்ந்து நடாத்தப்பட்ட நடவடிக்கைகளினுலும், ஜூலைக் கலவரங்களில் ஏனைய தமிழ்மக்களோடு தமிழ் மாணவர்களும் தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களிலிருந்து நிரந்தரமாகவே வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டமையினுலும் இன்று தமிழ் மாணவர்களது நிலை பெரும் பிரச்சினைக்குரிய விடயமாக மாறியுள்ளது.

இடம்பெயர்ந்த வடக்கு-கிழக்கு நோக்கிச் சென்றுள்ள தமிழ் மாணவ - மாணவியருடைய இன்றைய உரிமைப் போராட்டம் முழுவதும்நியாயமானதே அஃது இன்று நாட்டிலுள்ள வேறு மூலாதாரமான தமிழர் பிரச்சினைகள் யாவற்றுடனும் ஒன்றிணைந்தது. அதனுல் அதனுடன் சம்பந்தப்பட்ட யாவரும் பொதுமக்களும் மாணவர்களுடைய முயற்சியை வரவேற்கின்றனர்.

ஆயினும், தமிழர் பிரச்சினைகள் மீது சர்வகட்சி மாநாடு நடைபெறுகின்ற இவ்வேளையில் ''சாகும் வரை உண்ணாவிரதம்'', ''எதிர்ப்பு ஊர்வலம் நடத்துதல்'' போன்ற தீவிரநடவடிக்கைகள் பொருத்தமானவைதானுவென மாணவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த 8—10 மாதங்கள் வரை நீடித்துவரும் இடம்பெயர்ந்த மாணவர் பிரச்சினைபற்றிய போராட்டத்தை இன்னும் சில வாரங்களுக்குப் பின்போடலாகாதா? சிக்கலான இவ்வேளையில் அசாதாரண சூழ்நிலை உண்டாக்கப்பட்டு சரியாகவோ பிழையாகவோ, ''அனைத்தையுமே மாணவர் குழப்பிவிட்டனர்'' என்ற குற்றச் சாட்டுக்கு இலக்காவது விவேகமுடைமைதானு?

பலவழிகளில் பாதிக்கப்பட்டு நொந்துபோன மாணவர்களுடைய இளமைத் துடிப்பைப் பயன்படுத்தி. அவர்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லும் 'மூளைசாலி'களை மாணவர் இனம்கண்டு போராட்டத்தின் வழிமுறைகளைச் சீர்செய்தல் அவசியம்.

இடம்பெயர்ந்த மாணவர் கோரிக்கைகள் வெல்க.

'அமரன்'

சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

### மிருகக்காட்சிச்சாலை

6-1-84இல் வெளிவந்த தங்கள் நாளிதழில் மக்கள் கருத்து பகுதியில் மினி மிருகக்காட்சிச் சாலையும் மினிபூங்காவும் என்னும் தலைப்பில் வாசகர் ஒருவர் எழுதியிருந்த கருத்துக்களை வாசித்தேன்.

யாழ்: நகரில் பொழுது போக்குவதற்கென்று அதுவும் குறிப்பாக சின்னஞ்சிறுர்களுக்கென உள்ள ஒரேயொரு இடம் இந்த மினி பூங்காவே. (டாக்டர் சுப்பிரமணியம் பூங்கா) மழலைச் செல்வங்களை வைத்திருக்கும் எந்தவொரு பெற்றுருமே இந்த நேயரின் கருத்துக்களை ஏற்கமாட்டார்கள். சிறிய பூங்காவாக இருந்தாலும் அங்கு சிறிய அளவில் ஒரு மிருகக்காட்சிச்சாலை அமையுமானுல் சின்னஞ்சிறுர்களை கவர்வதற்கும் களிப்பூட்டுவதற்கும் இதைவிட சிறந்த இடம் கிடையாதெனலாம்.

நேயரின் கூற்று முழுக்க முழுக்க வளர்ந்தவர்களின் சௌகரியங்களை மனத்தில் வைத்தே எழுதியிருந்தார். பூங்காவின் பராமரிப்பு சரியில்லாவிட்டால் அதனைப் பூரணப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்திருக்கலாம்.

வீதிகளைத் திருத்துவதற்கும் மலகூடங்களைத் திருத்துவதற்கும் பொதுமக்களிடம் இருந்து எத்தனையோ வழிகளில் இருந்து பெறப்படும் பணத்தில் இருந்து திருத்தலாமே. மினி மிருகக்காட்சிச் சாலைக்கு செலவிடப்படும் பணத்தைதக்கொண்டுதான் இவற்றைத் திருத்தவேண்டுமா? ஆணையாளரின் ஆக்கபூர்வமான முயற்சிக்கு சின்னஞ்சிறுர்களை வைத்திருக்கும் எம்போன்ற பெற்றேர்களின் ஆதரவு என்றும் உண்டு.

வே. பாலச்சந்திரன்,
நீர்ப்பாசன திணைக்களம்,
வவனியா.

---

## லூர்து கன்னியர் மட வெள்ளி விழா

(கரவெட்டி)

கரவெட்டி லூர்து கன்னியர் மடத்தின் 25வது வருட வெள்ளிவிழா 18ம் திகதி கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் கரவெட்டிப் பங்குத்தந்தை அருட்திரு ஏ. ஞானனந்தன் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ் ஆயர் பேரருட்டிரு கலாநிதி வ தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராகவும் அனைத்திலங்கை கன்னியர் மடத் தலைவி அருட்தாயார் மோட் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

இவ்விழாவுக்கான ஒழுங்குகளை கரவெட்டி பங்கு மக்களும் இக் கன்னியர் மடத் தலைவி சங். சகோதரி எம். தேவநேசம் அவர்களும் மேற்கொண்டுவருகின்றனர். கார்மேல் சபைக் கன்னியர்மடம் யாழ் ஆயர் அதிவண தியாகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் கரவெட்டிப் பங்கின் கட்டளைக் குரவராக இருந்த போது அவரது பெரும் முயற்சியினுல் நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி நகரசபை பட்ஜட்:

# வீதி வேலைகளுக்கு ரூபா 4 லட்சம்; மின் நீட்டலுக்கு ரூபா 4 லட்சம்

## நகரமண்டபம் அமைக்கவும் திட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் 1984ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம், சபையின் செயலாளரான திரு. த. நவரத்தினராசாவினால் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வருட மொத்த வருமானம் ரூபா 51,83924 வாகவும் செலவு ரூபா 51,66055 வாகவும் உள்ளது. இதில் வட்டார வீதிவேலைகளுக்கு 4 லட்சம் ரூபாவும், மின் நீட்டலுக்கு 4 லட்சம் ரூபாவும், சாவகச்சேரி பஸ் நிலையத்தில் பொது மலசலகூடம் அமைப்பதற்கு 50,000 ரூபாவும், நூலக புத்தகங்கள் கொள்வனவுக்கு 25,000 ரூபாவும் விசேடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் நவீன சந்தைக்கான இரண்டாவது அபிவிருத்தி வேலைகள் சந்தையில் மேற்குப்பக்கத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இரண்டாவது கட்ட கட்டிட அமைப்பு வேலைகள் பூர்த்தியானதும், இப்போது கடைகள் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் புதிய கடைகள் வழங்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரில் ஒரு நகர மண்டபம் இல்லாமல் இருப்பது நீண்டகாலக்குறையாக இருந்து வருகின்றது எனவும் இக்குறையினைப் போக்கும் வகையில் சாவகச்சேரி வாடிவீடு அமைந்திருந்த காணியில் நகரமண்டபம் ஒன்றினை அமைப்பதற்கான ஆரம்ப பணிகளை துரிதமாக மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் செயலாளர் தெரிவித்தார்.

நகருக்கான விளையாட்டு அரங்கு அமைப்பதற்கான நிர்மாண வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதெனவும் அறியப்படுகிறது.

இவை தவிர யாழ் மாநகர சபையில் உள்ளது போல நகர சபையின் பராமரிப்பு வேலைகளை உடனுக்குடன் செய்வதற்கென தச்சுத்தொழிலாளர், மேசன் தொழிலாளர் மற்றும் பயிற்றப்படாததொழிலாளர்களை உள்ளடக்கிய பொது பராமரிப்புப்பகுதி ஒன்றினையும் சபை நடப்பாண்டில் நிறுவவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தனியார் கொந்தராத்து முறை நீக்கப்பட்டு கணிசமானளவு தொழிலாளர்கள் நிரந்தர தொழில் வசதிபெறவும், சபையின் நிதி மீதப்படுத்தப்படவும் வாய்ப்பு ஏற்படும் எனவும் எதிர்காலத்தில் சகலவிதமான வீதிதிருத்த வேலைகள் யாவும் நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்குகின்ற பொதுஸ்தாபனங்களுக்கு வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரியவந்துள்ளது.

# முதல் உதவிப் பயிற்சி நெறி

(சாவகச்சேரி)

சமுதாயப் பணிகளில் ஈடுபடுகின்ற தொண்டர்களுக்கான அடிப்படை சுகாதார கல்வி உட்பட முதல் உதவிப் பயிற்சிநெறி ஒன்றினை இம்மாதம் 16, 17, 18, 19ம்திகதிகளில் கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் அறவழிப் போராட்டக் குழுவும்—வடபிராந்திய சர்வதேச சமாதான இயக்கமும் இணைந்து நடத்தவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கான வகுப்புகளை யாழ்ப்பாண மாவட்ட சென். ஜோன்ஸ்அம்புலன்ஸ் பிரிவைச் சேர்ந்த நிர்வாக இயக்குனர்களுடன், பிரபல டாக்டர்களும் நடத்துவர்.

இந்நெறியில் 50 கிராமியத் தொண்டர்களை முதல் உதவிப் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களது கிராமிய சுகாதாரப் பணிக்கு மேலும் உதவி புரியக்கூடும் எனவும் பயிற்சியில் ஈடுபடுகின்ற சகல தொண்டர்களுக்கும் இறுதி நாளில் பரீட்சை நடத்தி சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அறவழிப் போராட்டக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# யாழ்.மாநகர எல்லைக்குள் சமூக நிலை ஆய்வு

## ஒத்துழைப்பு வழங்குமாறு ஆணையாளர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

"ஐக்கியநாடுகள் தாபனத்தின் குழந்தைகள் நிதியம் யாழ். மாநகரசபைக்கு அளிக்கவுள்ள நிதி உதவிகட்காகவும், நடைமுறை நிர்வாக முகாமைத்துவத்தை நவீன வழிகளில் மேற்கொள்வதற்காகவும், யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் அனைத்து குடும்பங்களிடமிருந்து, குடும்ப நிலை—சுகாதார வசதி, சமூக நிலை ஆய்வு ஒன்று நடாத்தப்பட விருக்கிறது. இவ்வாய்வின் பொருட்டு மாநகரசபை ஊழியர்கள் தொண்டு முயற்சியாக உங்கள் இல்லம் தேடி வருகையில் வேண்டிய ஒத்துழைப்பை வழங்குமாறு வேண்டுகிறேன்"

இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி வி, கே. சிவஞானம் பத்திரிகைகட்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார். தொடர்ந்து அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

"யாழ். மாநகரசபையில் சகல தகவல்களும் அடங்கிய முழுமையானதொரு புள்ளி விபரத்திரட்டு இல்லாமை பெருங்குறையாகும். இதனால் நிதி வழங்கும் ஸ்தாபனங்களிடமிருந்து திட்டங்களைசமர்ப்பித்து உதவிகோரவோ; நீண்டகால அடிப்படையில் திட்டங்களை ஒருங்குபடுத்தி அமுல்நடத்தவோ முடியாத இக்கட்டை நீக்கும்பொருட்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இப்போது பெறப்படும் தகவல்கள் குறைந்தது எதிர்காலத்தில் 5 ஆண்டுகட்காவது பயன்படக்கூடியவை. நகருக்கு நன்மை பயக்கும் திட்டமென்பதால் மாநகர சபை ஊழியர்கட்கு பரிபூரண ஒத்துழைப்பை மக்கள் நல்க வேண்டும். முக்கியத்துவம் வாய்ந்த "யூனிசெவ்" திட்டத்தின் முழுப் பயன்பாட்டை பெறவும்; முறையான புள்ளி விபரங்கொண்ட திரட்டொன்றை எதிர்காலத்திட்டங்களை அமுல்செய்ய மிகுந்த உதவியாக இருக்குமென்பதாலும், ஊழியர்களுடன் சன சமூக நிலைய நிர்வாகிகளும் இப் புள்ளிவிபரத் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர். எமது நகர மக்களின் ஒத்துழைப்பிலேயே இத்திட்டத்தின் வெற்றி அமைந்திருப்பதால் புள்ளிவிபரச் சேகரிப்பாளர்கட்கு சரியான தகவல்களை வழங்கி ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றேன்."

### திட்டமிட்டு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கற் பயிற்சிகளை வழங்கினர். இலங்கைக் குடும்பத்திட்டச் சங்கத்தால் யாழ். மாவட்டத்தில் மாதிரிக்கிராமமாகத் தெரிவு செய்யப்பட்ட 11மாதிரிக்கிராமங்களின் செயற்குழுத் தலைவர்கள் தும்பளை மாதிரிக் கிராமத்தொண்டர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

### பிரபஞ்சத்தில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்துகிறது. முழு சமுதாயத்தை ஓர் அமைப்பு எனவும் தனிநபர் ஒவ்வொருவருக்கும் அவருக்குரிய இடமுண்டு, பங்கு உண்டு, தத்தமது இடங்களில் ஒவ்வொருவரும் மாண்புடன் இருக்கலாம் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் அரசனுக்கும் வீதி கூட்டும் தொழிலாளிக்கும் வித்தியாசமில்லை என்பதை விளக்கி வைக்கின்றது, இருவர்களும் சமுதாய நலனுக்காக உழைக்கும் உழைப்பாளிகள் இருவரும் ஆன்மீக அடிபடையில் சமமானவர்கள். சுவாமி ஜியின் கருத்துப்படி மனிதர்கள் சமமானவர்கள். ஆனால் ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்குமிடையில் காணப்படும் வேறுபாடு ஆன்மீக ஈடேற்றம் அல்லது ஆன்மீக வெளிக்கொணர்வு சம்பந்தமாக அமையும்

இன்று நாம் காண்பதென்ன! பல சமயங்கள் இருந்தபோதிலும் ஒருவரை ஒருவர் நேசிக்கச்செய்யும ஆன்மீக உத்வேகமில்லை, சிலர் மனிதவர்க்கத்திற்கு அப்பாற்பட்ட வியக்கத்தக்க வெறுப்புக்குரிய செயல்களைச் சமயத்தின் பெயரில் புரிவதைப் பார்க்கும்பொழுது உள்ளம் உடையாமலிருக்கமுடிமா? அறிவு மலர்ச்சியடைந்தும் சமயத்தகராறுகள், குழப்பங்கள் குறைந்தபாடில்லை. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது சான்றோர் வாக்கு. ஒரு சமயம் மாத்திரம் இப்பிரபஞ்சத்துக்கு இருக்கவேண்டும் என்றாலும் மக்கள் தமது சிந்தனைகளு, சுபாவத்திற்கேற்ப பல வழிபாட்டுமுறைகளை, சமய தத்துவங்களைப் படைத்துள்ளார்கள் பல்வேறு சமயங்களும் ஆன்மீக ஈடேற்றத்திற்கு உதவக்கூடியவை, தொடர்புடையவை, முரண்பட்டவையல்ல என்பதை நல்ல அறிவு படைத்தவர்கள் மறுக்கமுடியாது.

பல சமய நெறிகளும் ஒரு உண்மையைப் பற்றிக் கூறும் பல கருத்துக்களாகும். எங்கு சமயப்பற்று அதிகமாகக் காணப்படுகின்றதோ அங்கு வேறுபட்ட சமயக்கருத்துக்கள் காணப்படுவது இயற்கையே. ஆனால் இவ்வேறுபாடு பகைமையை வளர்க்குமானால் அது சிந்தனையற்ற பயனற்ற செயலாகும். இது வெறுப்பையே வளர்த்துச் சமுதாயத்தைத் தகர்த்து விடும்

பல் வேறுபட்ட சமயவாதிகள், ஆதியும் அந்தமுமில்லாத பரம்பொருளை உள்ளத்தில் கொண்டு, தமக்குள்ளே தோன்றிய கருத்துவேறுபாடுகளை அகற்றி, இணக்கம் பெற்று, அன்புடனும் அமைதியுடனும் வாழ சுவாமி விவேகானந்தரின் போதனைகள் உறுதுணையாக நின்று பல சாதனைகளை நிலைநாட்டும் என்பது டலரதும் அபிலாசைகளாகும்.

# "ஊரெழு அரச காணிகளை நிலமற்றவர்க்கு வழங்கவும்"

(ஊரெழு)

பத்துலட்சம் வீடுகளை அமைக்கும் திட்டம் சம்பந்தமான பிரசாரக் கருத்தரங்கொன்று அண்மையில் ஊரெழு கணேசவித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

வலிகாமம் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கு.கிட்ணர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் ஊரெழு சிராமசேவை அலுவலர், ஊரெழு கிராமத்திலுள்ள பொதுநல சங்கங்களின் பிரதிநிதிகள், தேசிய வீடமைப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

ஊரெழு கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான காணிகள் பெருமளவில் இருப்பதை தேசிய வீடமைப்பு அதிகார சபை உத்தியோகத்தர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்த பொதுமக்களும், பொதுநல சங்கங்களின், உறுப்பினர்களும் அந்தக் காணிகளை. கிராமத்திலுள்ள நிலமற்றவர்களுக்குப் பகிர்ந்து வழங்கும்படிகேட்டுக் கொண்டனர்.

ஊரெழுவில் மாதிரிக் கிராமமொன்றை அமைப்பதற்கான சகலவசதிகளும் இருப்பது எடுத்துக் காட்டப்பட்டபோது இதற்குப் பதிலளித்த தேசிய வீடமைப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்கள் தற்பொழுது தொகுதிக்கு ஒரு மாதிரிக்கிராமம் என்ற வகையில் கோப்பாய் தொகுதியில் கிந்துசிட்டி என்ற மாதிரிக் கிராமமொன்று இப்பொழுது அமைக்கப்பட்டு வருவதாகவும், காலப்போக்கில் ஒரே தொகுதியில் வேறு மாதிரிக் கிராமங்களை அமைக்கவேண்டியேற்பட்டால் ஊரெழுவிலும் மாதிரிக்கிராமத்தை அமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்கள். (கு)

### நடந்து செல்லும் பயணிகள்

(கண்டிக்குளி)

மன்னார் - சங்குப்பிட்டி வீதியில் பல இடங்களில் அண்மையில் பெய்த மழைவெள்ளம் வீதிக்கு மேலாக பாய்கிறது.

நாயாறு என்னும் இடத்தில் உள்ள வீதி வெள்ளத்தால் உடைக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு கரையில் இருந்து மறு கரைக்கு பிரயாணிகளும், பொதுமக்களும் வெள்ளத்தில் நடந்து வாகனங்களில் மாறி பிரயாணம் செய்யவேண்டியுள்ளது. (கு)


வாடிக்கையாளர்களுக்கு

ஓர் நற்செய்தி!

அசல் **TDK** கசற்றுக்களை

மிகவும் மலிவு விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மொத்த வியாபாரிகட்கு விசேடகழிவு உண்டு.

V. K. இராசரத்தினம்,

95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
வேலை வாய்ப்பு பெற
அரியதோர் சந்தர்ப்பம்

எலக்றிக்கல் என்ஜினியரிங்
டிப்ளோமா

க. பொ. த. (சாதாரணம்) விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆறு மாதத்திற்குரிய பாடநெறி முழுப்பாடத் திட்டத்திற்கும் ரூபா 850/- மூன்று தவணைகளில் செலுத்தப்படலாம்.

பட்டப்படிப்புக் கல்லூரி

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# "இறைபக்தியும், தன்னலமற்றபணியும் சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாதது"

(புலோலி)

"இறைபக்தியும் தன்னல மற்ற பணியுமே சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையா தனவாகும். தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி அறுபத்தேழு ஆண்டுகள் இவ் உலகில் வாழ்ந்து ஒரு அணையா விளக்காகத் திகழ்ந்தார்."

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெற்ற தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் ஜயந்தி விழாவிலே உரையாற்றிய சுவாமி சித்ரூபானந்தா குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய சுவாமி சித்ரூபானந்தா கூறியதாவது:

"தூய அன்னை சாரதாதேவி அனைவருக்கும் வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியுள்ளார், அன்னை வாழ்வில் உன்னத மனைவியாகவும், போற்றுதற்குரிய தாயாகவும், பல் வேறு சிறப்புகளைக் கொண்ட துறவியாகவும் ஒரே நேரத்தில் சிறப்பாக வாழ்ந்து காட்டினார்.

"இன்று தமிழினம் இறை பக்தி குறைந்து வருகின்றமையினாலேயே பல அல்லல்களை அனுபவித்து வருகின்றது. இறைவனிடத்தில் சரணடைந்தவன் காப்பாற்றப் படுவான் என்பது அன்னையின் வாக்காகும். அன்னை சாரதா தேவிசாதி, சமய பேதங்களுக்கு அப்பால் நின்று செயல்பட்டு வழிகாட்டினார்" என்றார்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | ஜெர்மன் விளையாட்டுகள் |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | சிங்கள நிகழ்ச்சி |
| 7-45 | இசைநிகழ்ச்சி (சிங்களம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | குறுந் திரைப்படம் [சிங்களம்) |
| 9-05 | விசேட தைப்பொங்கல் நிகழ்ச்சி |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்] |
| 10-00 | 'வக்னர்'- (ஆங்கிலச் சித்திரம்) |
| 10-30 | உலகச்செய்தித் தலையங்கங்கள் |
| 10-35 | 'வக்னர்' தொடர்ச்சி |
| 10-55 | நிகழ்ச்சிகள் முடிவு |

## நிதி நிறுவன இயக்குநர் கார் துப்பாக்கிமுனையில் கடத்தல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு தனியார் நிதி நிறுவன இயக்குநரின் கார் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இக்கார் கடத்தப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கோவில் வீதியிலுள்ள குறிப்பிட்ட இயக்குநர் தமது வீட்டுக்கு முன்னால் வைத்து காரைத்துடைத்துக் கொண்டு நின்ற சமயம் சில இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி காரைக் கடத்திச் சென்றுள்ளார்கள் என்று யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

## வைத்தியசாலை பொறுப்பதிகாரி

[பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக செல்வி எம் அற்புதநாதன் இம்மாதம் தொடக்கம் பதவி ஏற்றுள்ளார். பருத்தித்துறையைச் சேர்ந்த இவர் முன்னர் களுத்துறை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றினார். (கு)

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 28ம் திகதி
வியாழக்கிழமை
(12-1-84)

மேடம்: தனதானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும தோன்றக்கூடும் கடமையாற்றும் இடத்தில் நிதானம்வேண்டும் அதிக ஆசையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

இடபம்: இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சி இடம் பெறும் திடீர் திருப்பம் திரவிய இலாபத்தை கொண்டு வரலாம் நண்பர்கள் ஆதரவும் கிடைக்கும்.

மிதுனம்: ஆசாரக் குறைவுக்கும் அவசரப் போக்குக்கும் இடமுண்டு அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும் பூமிப் பிணக்கினால் வழக்கு விவகாரத்துக்கும் இடமேற்படும்.

கடகம்: மாதுரு வழிப் பெருமைக்கும் இட முண்டு கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும் மனம் போல் யாவும் இன்றுநடக்கும்

சிங்கம்: புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும் புத்திரர்களால் புகழும் கிடைக்கும் இறை நம்பிக்கையுடன் இல்லத்தில்இனிமை தவழும்.

கன்னி: நம்பிக்கை மோசடி நடக்கக்கூடும் நண்பர் ஒருவர் உமது காலைவாரிவிடுவதற்கு முயற்சி எடுக்கலாம் இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு தெய்வநம்பிக்கையே சிறந்த மருந்து.

துலாம்: இல்லத்தில்இனிமை தவழும் வெளியிடத்தொடர்புகள் பெருகும் இனசனங்களின் உதவியுடன் செல்வாக்கு உயரும்.

விருச்சிகம்: பணத்தைக் கொடுத்துப் பகையைச் சம்பாதித்துக் கொள்ளுவீர்கள் நண்பர்கள் மூலம் புதியதொல்லைகள் தோன்றக்கூடும் நிதான புத்தியுடன் நடக்கவும்.

தனுசு: தெய்வ நம்பிக்கை மேலிடும் பொதுப் பணிகளில் நாட்டம் பிறக்கலாம் பிதாவழி ஆதரவு தராளமாகக் கிடைக்கும் சிறப்பான தினம்.

மகரம்: தொழில் துறையில் நல்ல வருமானம் கிடைக்கும் புதிய உடன்படிக்கையின் மூலம் நல்ல திருப்பம் ஏற்படும் மகிழ்ச்சிகரமான பிரயாணமும் உண்டு.

கும்பம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் சிலருக்கு பதவி உயர்வும் ஏற்படலாம் வெளியிடத் தொடர்புகள் மூலம் செல்வாக்குப் பெருகும் நீண்டநாள் பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.

மீனம்: அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும் உடல்நலம் பாதிக்கப்படலாம் அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை விளைபொருள்களினால் பணம் விரயமாகலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை
குவேந்திரன்

## கூட்டுறவு உதவி ஆணையாளர் திடீர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசம் மண்டை தீவு பனம்பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு திடீர் விஜயம்செய்து இச்சங்க நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

உற்பத்தியாளர் சங்கத்திற்கு கடன் வழங்குவது தொடர்பான ஆலோசனையின்மீது இச்சங்க நடவடிக்கைகளை நேரில் கண்டறிவதற்காக அவர் திடீர்விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.




ZENITH

பிரகாசமான இயற்கை வர்ணங்களை அளித்து மகிழ்ச்சியை உண்டு பண்ணும் உன்னத டெலிவிஷன்களை அளிப்பது பிலிப்ஸ்

நம்பகரமான நீண்ட ஆயுள்கொண்ட பிலிப்ஸ் வர்ண டெலிவஷனின் சிறப்பம்சங்கள்

- உள்ளடக்கப்பட்ட வோல்டேஜ் சமநிலைமானி
- உஷ்ண மண்டல பிரதேசங்களுக்கு உகந்த உருவ அமைப்பு
- தன்னியக்க ஒலி, ஒளி கட்டுப்படுத்தும் சுழல் முறுக்கிகள்
- தெளிவான விம்பம்
- சக்தியுள்ள ஒலிக்கு விசேட டபிள்கோன் முறை ஒலி அமைப்பு
- VCR. வீடியோ விளையாட்டுக்கள் வீடியோ டிஸ்க் ஆகியவற்றிற்கான இணைப்புகள்

நீங்கள் பிலிப்ஸ் டெலிவிஷனை தேர்ந்தெடுக்கும்போது - நவீன தொழில் நுட்ப வேலைப்பாடுகளுக்கமைய உருவாக்கப்பட்ட சிறந்த டெலிவிஷனை வாங்கிறோம் என்ற பெருமையை அடைவீர்கள்

இலங்கையில் ஏக விநியோகஸ்தர்கள்

HAYLEYS

### ஹேய்லீஸ் லிமிட்டெட்.

சேவைப்பிரிவு: 25, பொஸ்ரர் ஒழுங்கை, கொழும்பு 10. தொலைபேசி: 91181-9
காட்சியறை: 646, காலி வீதி, கொழும்பு-3. தொலைபேசி: 86958
சுங்கவரி நீக்கப்பட்ட விற்பனை நிலையம், 2, சிம்மாடி, கொழும்பு-3.

PHILIPS

PHILIPS

நாம் பிலிப்ஸ் உடன் இணைந்து சிறந்ததையே வழங்குவோம்

இலகு தவணையில் செலுத்த ஒழுங்கு செய்யப்படும்

கலர் TV
14'' 287 டாலர் ரூபா 11,400/-
16'' 325 டாலர் ரூபா 12,500/-
20'' 400 டாலர் ரூபா 15,500/-
26'' 700 டாலர் ரூபா 22,000/-
உத்தரவாத காலங்கள்...

கறுப்பு/வெள்ளை TV
12'' 90 டாலர் ரூபா 2,975/-
14'' 112 டாலர் ரூபா 3,750/-
17'' 148 டாலர் ரூபா 5,800/-
ரெலிவிஷன் செற்ஸ் - 1 வருடம்

பிலிப்ஸ் VHS வீடியோ கஸெற் றெக்கோடர் 420 டாலர் 'TC'
காட்சிக் குழல்-3 வருடங்கள்

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி-ஜெய்சித்திரா
மஞ்சுளா-கமலஹாசன்
**சத்யம்**
(கலர்)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி
**அன்பே வா**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
**மூன்றாம்பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)


**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-15, 9-30
அரங்கு நிறைந்த
மகத்தான 3-வது
மகளிர் வாரம்
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**
(கலர்)
இசை: இளையராஜா

**ஹரன்** (யாழ். நகர்)
ஜனத்திரள் காட்சிகளாக
தினசரி 10-30, 2-30, 4-45
7-15, 9-30
Dee Wallace - Patrick
Macnee
in
**"The Howling"**
Adults only
இப்படம் திரையிடப்பட்ட போது அமெரிக்க மக்கள் இரவில் வெளியே நடமாட அஞ்சினார்கள். அந்த உருவத்தின் மர்மம் என்ன?

இதற்கு மட்டும் ஏன் இத்தனை பெண்கள் கூட்டம்?
**றீகல்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,
9-00
காட்சிக்கு காட்சி ஓட்டமாக வரும் மகளிர் கூட்டம்! டிக்கற் இன்றி வாட்டமுடன் திரும்பிச் செல்லும் ஏமாற்றம்!
மோகன் ......
பூர்ணிமா ஜெயராம் ...
கவுண்டமணி ... ...
நடிக்கும் தேன் சிந்தும்
7 ஸ்வரங்களுடன்
**பயணங்கள் முடிவதில்லை**
(கஸ்மெண் கலர்)
பொன்விழா காவியம்

**ராஜா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00

சிவாஜி - சௌகார்
**பாபு** (புதிய பிரதி)

யாழ். ஆஸ்பத்திரி யாழ். நோயாளரின் நன்மைகருதி யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர்களும், சில மருத்துவபீட மாணவர்களும் தொடர்ந்து இரத்ததானம் வழங்கி வருகிறார்கள். யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்ததானம் வழங்கும் டாக்டர் ஒருவரிடமிருந்து இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி இரத்தம் எடுக்கும் காட்சியை இங்கு காணலாம். பொதுமக்களும் இரத்ததானம் வழங்குவதற்கு முன்னேற்பாடாக இந்த இரத்ததானம் வழங்கப்படுகிறது.

படம்: 'தேவா'

# வை.எம்.சி.ஏ. உதவியுடன் அகதிகளுக்கு 316 வீடுகள்!

## வடக்கு கிழக்கில் 276 அமையும்

[கிளிநொச்சி]

உலக வை. எம். சி. ஏ. இயக்கம் வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு நிவாரண உதவியாக 316 வீடுகளை கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளது.

அகில இலங்கை ரீதியில் கட்டப்படவுள்ள இவ்வீடுகளிற்கான செலவுத் தொகையாக மூன்று கோடியே எழுபத்திரெண்டு இலட்சம் ரூபாவை இவ்இயக்கம் இலங்கை வை. எம். சி. ஏ. இயக்கத்திடம் வழங்கியுள்ளது.

தமிழர் வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் 276 வீடுகள் இந்நிதிமூலம் அமையவுள்ளது. வடக்கில் வவனியாவில் 50 வீடும், பரந்தனில் 10 வீடும், யாழ்ப்பாணத்தில் 50 வீடும், பண்டத்தரிப்பில் 20 வீடுகளுமாக 130 வீடுகள் கட்டப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வீடுகள் கட்டும் திட்டம் அவ்வப் பகுதியில் இயங்கும் வை. எம். சி ஏ. இயக்கங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் 25 வீடும், திருமலையில் 50 வீடுகளும், கல்லாற்றில் 30 வீடுகளும், கல்முனையில் 25 வீடுகளும், அக்கரைப்பற்றில் 16 வீடுகளுமாக 146 வீடுகள் அமையவுள்ளது. ஏனைய வீடுகள் தென்பகுதியில் அமையவுள்ளது.

வீடுகள் கட்டுவதற்கான ஏற்பாடுகளை வை. எம். சி ஏ. தேசிய கவுன்சில் தலைவர் ராஜ் வீரசிங்க, செயலாளர் போயிட் பெரேரா ஆகியோர் செய்துவருகின்றனர். [கு]

## தாச்சிச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாரயண அபிவிருத்தி சங்கத்தின் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் தாச்சிச் சுற்றுப் போட்டியொன்றினை நடாத்த இருப்பதினால் இதில் பங்குபற்றவிரும்பும் கழகங்கள் விண்ணப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளன. (கு)


**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-சௌகார் ஜானகி
**பட்டாக்கத்தி பைரவன்**

**சாந்தி** (யாழ். நகர்)
11th and 12th Only
10-30, 2-15, 4-30, 7-00
Kirk Douglas....
Richard Harris in
"THE HEROES OF TELEMARK"
Action Thrill Color

**லிடோ** [யாழ்நகர்]
தினசரி 3 காட்சிகள்
**OMAN II**
(action packed)

**வெலிங்டன்**
யாழ் நகர்
தினசரி 3 காட்சிகள்
பிரதாப் - சுஜாதா
**நூல் வேலி**


## "மாணவர் பிரச்னை: உடன் தீர்த்து வையுங்கள்"

(யாழ்ப்பாணம்)

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும், பாதிக்கப்பட்ட தமிழ் மாணவரின் நிலை மோசமடைந்துவருகிறது. உடனடியாக இதனை சுமுகமாக தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கவும்"

உயர்கல்வி அமைச்சு செயலாளர் திரு கல்பகேக்கு யாழ். பெற்றோர் சங்க செயலாளர் திரு. எஸ். பொன்னையா அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; "மாணவர் போராட்டம் நீதியானது. பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களை தமிழ் பகுதிகளுக்கு உடனடியாக மாற்றவேண்டும் என்பதில் போதிய நியாயம் இருப்பதாக, பெற்றோர்கள் கருதுகிறார்கள். (க)

### இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்

## கோரிக்கைகள் வெற்றிபெற புங்குடுதீவில் பிரார்த்தனை!

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த பல்கலைக் கழக தமிழ் மாணவர்களின் கோரிக்கைகள் வெற்றிபெற வேண்டும் எனவும் நாட்டில் அமைதியும் சமாதானமும், நீதியும் நிலவேண்டும்மெனவும் புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய வேளாங்கண்ணி மாதா முன்னிலையில் பிரார்த்தனை நடைபெறவுள்ளது.

இம்மாதம் 15ம் திகதி பிற்பகல் நடைபெறும் திருவிழா உற்சவத்தில் பங்குத்தந்தை அருட்திரு றெஜிஸ் ராஜநாயகம் பிரார்த்தனைப் பூசைப் பலியை நடாத்துவார்.

தைப்பொங்கல் தினத்தன்று இவ்வாலயத்தில் வேளாங்கண்ணி மாதா திருவிழாவும், பொங்கல் விழாவும் நடைபெறுகிறது.

அன்றுமாலை 7-30க்கு ஆலயத்திலுள்ள வீரமாமுனிவர் கலை அரங்கில் கலைநிகழ்ச்சிகள் பங்குத்தந்தை தலைமையில் நடைபெறவுள்ளன. வைத்திய கலாநிதி ஜே. பி. சி. பிலிப்ஸ் விசேஷ சிறப்புரை ஆற்றுவார்.

பண்டிதர் வி. வா. நல்லதம்பியின் சேவையைப்பாராட்டி, அருட்திரு ராஜநாயகம் அடிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார். (மா கு)

## இளம்பெண் தற்கொலை

(சாவகச்சேரி)

மனவிரக்திகாரணமாக மணமான இளம் பெண்ணொருவர் வீட்டு கிணற்றுக்குள் குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

சாவகச்சேரியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மரண விசாரணையை ஒத்திவைத்த திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. வே. கனகசபை சடலத்தினை யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள பிரேத அறையில் பாதுகாப்பாக வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## கட்டுப்பாட்டு விலையில் எண்ணை விநியோகம்

(கரவெட்டி)

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் பெற்றோல் நிலையத்தில் அரச கூட்டுத்தாபன வாகனங்களுக்கு கட்டுப்பாட்டு விலையிலேயே எண்ணெய் விற்பனை செய்வதற்கு சங்கத்தின் தலைவர் திரு த. சிதம்பரப்பிள்ளை நடவடிக்கை எடுத்துள்ளார். எனினும் இதன்மூலம் சங்கத்திற்கு கணிசமான நட்டம் ஏற்படுவதாகவே அவர் தெரிவித்தார்.

## சைவ சமய பயிற்சி வகுப்புகள்

(வவனியா)

வவனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தாரால் சங்க மண்டபத்தில் தினசரி காலை நேரத்தில் மாணவ மாணவிகளுக்கான சைவசமயப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. பாடசாலை விடுமுறை நாட்களிலும் மாலைவகுப்புகள் நடத்த உத்தேசித்திருப்பதாக மன்றச் செயலாளர் திரு. ந. செல்லையா தெரிவித்தார்.

## ஏகாதசி விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயத்தில் ஏகாதசி விரத விழா இம்மாதம் 14ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. கிளிநொச்சிப் பகுதியின் பல பகுதிகளில் இருந்தும் பெருந்திரளான அடியார்கள் கலந்துகொள்ளும் இவ்வுற்சவத்தில் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளது. (கு)

## உபஉணவுப் பயிர்ச்செய்கை

[சாவகச்சேரி]

மறவன்புலோ பகுதியில் உபஉணவுப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் வயல்களிலும், வளவுகளிலும் கட்டாக்காலி மாடுகளைக் கண்டபடி விடவேண்டாம் என்று சாவகச்சேரி உதவி அரசாங்கஅதிபர் திரு. க. துரைராசா மறவன்புலோ கிராமத்தில் கால்நடை வளர்ப்போருக்கு எச்சரிக்கை செய்துள்ளார்.

## நிரந்தரமாக நியமிக்குமாறு கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

அராலி வடக்கு - மேற்கு பிரிவுக்கு நிரந்தரகிராமசேவை உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்துதருமாறு இப்பகுதியிலுள்ள பொது நலஸ்தாபனங்கள் யாழ் அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

தற்போது அராலிவடக்கு மேற்கு கிராமசேவை உத்தியோகத்தரின் கடமைகளை வட்டுக்கோட்டை கிழக்கு கிராமசேவை அலுவலர் கவனித்துவருவதால் இப்பகுதி மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்குள்ளாவதாகவும், இங்கு நிரந்தரமான ஒருகிராமசேவை உத்தியோகத்தரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இக்கோரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (கு)

## பரந்தன்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்கள பொறியியலாளரின் பொறுப்பிலுள்ள இவ்வீதி இதுவரை திருத்தப்படாததால் மூலைத்தீவு மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாவது குறித்து விசுவமடு சனசமூக நிலையத் தலைவர் திரு கி. ஆறுமுகம், யாழ் மாவட்ட அமைச்சர் திரு யூ பி விஜயகோனுக்கு கடிதமூலம் முறையிட்டுள்ளார்.

## பல்கலைக்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அந்த இடத்திலேயே உட்கார்ந்துவிட்டனர்.

கண்ணீர்ப்புகைக்குண்டு வீசுவதற்குத் தயாராக இரு பொலிசார் முகமூடிகளுடன் நின்றனர். மற்றும் சில பொலிசார் ஆயுதபாணிகளாக நின்றனர். இதற்கிடையில் ஊர்வலத்தில் வந்துகொண்டிருந்த மாணவர்களில் ஒரு பகுதியினர் ஸ்ரான்லிவீதிக்கு வந்து சேர்ந்ததும், பொலிசார் அவ்விடத்துக்கு விரைந்து புகையிரதக்கடவை கதவுகளை பூட்டி ஊர்வலம் முன்னேறாமல் தடைசெய்தனர்.

### மாணவர்கள் கோஷம்

சுலோக அட்டைகளைத் தாங்கி கோஷங்களை எழுப்பிய மாணவர்கள் அமைதியாக அவ்விடத்தி குந்திவிட்டனர்.

யாழ். பொலிஸ் அதிபர் அங்குவந்துசேர்ந்ததும், புகையிரதக்கடவை கதவுகளை திறக்கச் செய்தனர். ஊர்வலம் தொடர்ந்து புறப்பட்டது. கோஷங்கள் எழுப்பட்டன.

### போக்குவரத்து பாதிப்பு

மீண்டும் வெலிங்டன் சந்தியில் வைத்து ஊர்வலம் பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டது இதனல் போக்குவரத்து வாகனங்கள் வேறுபாதைகளால் திசைதிருப்பட்டன.

இந்த இடத்திலும் கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசுவதற்குத் தயாராக இரண்டு பொலிகார் நின்றுகொண்டிருந்தனர்.

உதவிப் பொலிஸ் அதிபர் ரி. மனோகரனும், பொலிஸ் அதிபர் ரி. இ. ஆனந்தராசாவும் மாணவர் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். ஊர்வலம் செல்லாமல் திரும்பிச் செல்லுங்கள் என்று பொலிஸ் தரப்பில் கேட்கப்பட்டது.

மாணவர்கள் ஊர்வலம் நடத்தியே தீருவோம் என்று அடம்பிடித்து, ஓரமாக இருந்து விட்டனர்.

15 நிமிடங்களின் பின்னர் பொலிஸ் அதிபர் கட்டம் கட்டமாகப் பிரிந்து ஊர்வலமாகச் செல்லுங்கள் என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தினர்.



நேற்றைய ஊர்வலத்தில் கலந்துகொண்ட பல்கலைக்கழக தமிழ் மாணவிகளின் ஒரு பகுதியினரை இங்கு காணலாம்.

கட்டம் கட்டமாக சிறிது தூரம் சென்ற மாணவர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்து நீண்ட ஊர்வலமாகக் கோஷங்களை எழுப்பிக் கொண்டு, முட்டாஸ் கடைச்சந்தியால் திரும்பி, காங்கேசன்துறை வீதி வழியாக நாச்சிமார்கோவிலை அடைந்து இராமநாதன்வீதி ஊடாக 1-30 மணியளவில் யாழ். பல்கலைக்கழகம் சென்றடைந்தனர்.

மாணவர்கள் ஊர்வலமாகச் சென்ற வீதிகளூடாக பொது மக்கள் குழுமிநின்று ஆதரவு தெரிவித்தனர்.

### ஊர்வலத்தில் சுலோகங்கள்

வீட்டு வாசல்கள் தோறும் பொதுமக்கள் கூட்டமாக நின்று ஊர்வலத்தில் வந்த மாணவர்களுக்கு குளிர்பானம் வழங்கினர்.

''வடக்கு—கிழக்கில் இடம் பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களுக்கு இடவசதி செய்துகொடு''

''சாகும்வரை உண்ணாவிரதக் கோரிக்கையை நிறைவேற்று''

''சிங்கள மாணவர்களுக்கு ஒரு நீதி; தமிழ் மாணவர்களுக்கு ஒரு நீதியா?'' போன்ற சுலோக அட்டைகள் காணப்பட்டன.

ஊர்வலத்தில் சென்ற ஒரு பகுதி மாணவர்கள் தங்கள் வாய்களையும், கைகளையும் கறுப்புத் துணிகளால் கட்டிக்கொண்டு சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது

### ஹர்த்தால் கோரிக்கை

அகதிகளாக இடம்பெயர்ந்த தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவுகோரி வடக்கு—கிழக்குப் பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அனைத்துத் தமிழ் மாணவர்கள் துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளனர்.

இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் ஹர்த்தால் அனுஷ்டிக்கவேண்டும் என்பதே அவர்களின் வேண்டுகோளாகும். (மா)

## மின்சாரசபைத் தலைவருக்கு புகார்

(சுண்டிக்குளி)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை நெல்லியடி உப அலுவலகத்தால் வழங்கப்படும் மின்சார விநியோகம் பற்றி தகுந்த பொறியியல் நிபுணர் ஒருவரை அனுப்பி பரிசோதனை செய்யும்படி இப்பகுதி பிரமுகர்கள் மின்சார சபைத் தலைவருக்கு புகார் செய்துள்ளனர்.

## கூட்டணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போது தமிழ்க் காங்கிரஸ் குழுவில் திரு. குமார்பொன்னம்பலம், திரு. மோதிலால்நேரு, திரு. ரி. மகேந்திரராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாநாடு நடைபெறும் ஒவ்வொரு நாளும் சந்தித்து முடிவு எடுப்பதென்றும் இச்சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது. [இ]

## ஜனாதிபதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாகும்வரை உண்ணாவிரதம், மட்டக்களப்புப் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலும் நெருக்கடியான ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

''இப்பிரச்னையைத் தீர்க்காவிட்டால் அது அனைத்துத் தமிழ் மாணவர்கள் மத்தியில் விரக்தியான ஒரு நிலையை உருவாக்கும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பார்த்தசாரதியுடன் சந்திப்பு

இடம் பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களின் பிரச்னை தொடர்பாகத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு. பார்த்தசாரதியை நேற்றுச் சந்தித்து இப்பிரச்னை பற்றி விரிவாக அவருக்கு விளக்கினார்கள். [வெ]

## சுங்க..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் அறையொன்றைப்பலவந்தமாக உடைத்து சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்ட கடத்தல் பொருள்கள் கொண்ட ஒன்பது பொதிகளைக் கடத்திச் சென்றனர்.

## அழைக்கப்பட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய மகாநாட்டில் மகாசங்கப் பிரதிநிதிகளும், சிங்கள சங்கங்களின் பிரதிநிதிகளும், முஸ்லிம் அமைப்புப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

சிங்கள சங்கங்களின் பிரதிநிதிகளாக திரு. அல்பேர்ட் எதிரிசிங்க, திரு. காமினி இரியகொல்லை, திரு. எரிக்அமரசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்

### இந்து, கிறிஸ்தவ பிரதிநிதிகள்

நேற்று நடைபெற்ற மகாநாட்டின் விபரங்கள் குறித்து, தகவல் திணைக்களத்தில் நேற்றிரவு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி விளக்கினார்.

''இந்து, கிறிஸ்தவ அமைப்புக்கள் இம்மகாநாட்டில் பங்குபற்றுவதில் மிகவும் ஆர்வம் காட்டியுள்ளன என்றும் இந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் அழைக்கப்படுவார்கள் என்றும் ஜனாதிபதி நேற்றையமகாநாட்டில் தெரிவித்திருந்தார். இதற்கிணங்க, கிறிஸ்தவ அமைப்பின் பிரதிநிதிகளாக பிஷப் கோமஸ்லஸ்லெவ், பிஷப்கிங்ஸ்லிசுவாம்பிள்ளை, பிஷப்சுவிடின் பெர்ணாண்டோ ஆகியோரும் இந்து அமைப்புப் பிரதிநிதிகளாக இந்துமாமன்றத் தலைவர் திரு. வி சிவசுப்பிரமணியம், இராம கிருஷ்ண மிஷன்சுவாமி ஸ்ரீ பிரேமதிமாநந்தாஜி, திரு. யோகேந்திரா துரைசுவாமி ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்'' என்று அமைச்சர் லலித் கூறினார்.

### வடபகுதி சம்பவம்

ஒரு சந்தர்ப்பத்தில்; ''வடக்கில் ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்இன்று (நேற்று)நிகழ்ந்துள்ளது. இது மாநாட்டைப் பாதிக்குமா?'' என்று நிருபர் ஒருவர் அமைச்சரைக் கேட்டார்.

அதற்கு அமைச்சர்;'எனக்கு இது பற்றித் தெரியாது. இப்படியான சம்பவம் எதுவும் மகாநாட்டைப் பாதிக்காது'' என்றார்.

## மரண அறிவித்தல்

### திருமதி தேவநேசம் உவாட்ஸ் வோத்

திருமதி தேவநேசம் உவாட்ஸ்வோத் அவர்கள் காலமானார். இவர் D. T. உவாட்ஸ்வோத் அவர்களின் அன்பு மனைவியும், நேசராஜ் உவாட்ஸ்வோத்தின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் அடக்க ஆராதனை இன்று 12-1-84 பிற்பகல் 2 மணிக்கு ''ஜோய் கொட்'' கென்ஸ்மன் ஒழுங்கை சாவகச்சேரியில் நடைபெறும்.

(110)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு நாகேந்திரம்

சண்டிலிப்பாய் மேற்கு—சண்டிலிப்பாய்

11-1-84 காலமாகிவிட்டார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், இராமலிங்கம், நடராசா, இராசா, நவரத்தினம் (மஸ்கன் கொம்பனி - யாழ்ப்பாணம்), கணேசராஜா (ஆசிரியர் சண்டிலிப்பாய் அரசினர் தமிழ் வித்தியாலயம்), சிவகுருநாதன், துரைசிங்கம், இராசலக்சுமி, செல்லம்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், இ. நவரத்தினம் (உப அதிபர் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), க. இராசரத்தினம் (எழுதுவினைஞர் மானிப்பாய் ப. நோ. கூ. ச), பரமேஸ்வரி, தவமணி, சோதிராணி, விக்கினேஸ்வரி, ரேணுகாதேவி ஆகியோரின் மாமனாரும், ந மணிவண்ணனின் (தந்தி தொலைபேசி திணைக்களம் - யாழ்.) பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 12-1-84 வியாழக்கிழமை நண்பகல் விளாவெளி மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

(119)

## மரண அறிவித்தல்

### செல்வன் இ. பிறஷன்ராசியோ பொற்குணராஜா

[மாணவர் ஓமந்தை மகாவித்தியாலயம்]

இவர் பத்தாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய தபால் அதிபர் M. P. இராசநாயகம், ஞானசெந்தரி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், இரட்ணகுமாரி, சந்திரகுமாரி, சற்குணராஜா, சத்தியகுமாரி, சுகிர்தகுமாரி, பற்குணராஜா, நற்குணராஜா, வதனகுமாரி, ஜமுனகுமாரி ஆகியோரின் அன்புச்சகோதரனும், திருமதி ஆ. தேவசகாயம், காலஞ்சென்ற திருமதி பெ. மரியாம்பிள்ளை ஆகியோரின் அன்புப் பேரனும், பியன்சியாலி சரோஜினிதேவியின் (யாழ் வளாகம்) அன்புமைத்துனனும், இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் T. அமிர்தரட்ணம், திருமதி மே. அமிர்தரட்ணம் (ஆசிரியை ஓமந்தை), T. பேரின்பநாயகம், T இராஜேந்திரம் ஆகியோரின் அன்பு மருமகனும், M. பிலிப்பானந்தன் (தலைமையாசிரியர் - வசாவிளான்), M P. இம்மானுவேல் (சட்டத்தரணி-மட்டக்களப்பு), காலஞ்சென்ற M. J. இராசதுரை தம்பதிகள் ஆகியோரின்பெருமகனும் ஆவார் அன்னாரின் நல்லடக்கம் ஓமந்தை சேமக்காலையில் 9-1-1984 அன்று 4 மணிக்கு நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

(118)

## மரண அறிவித்தல்

கோண்டாவில் வாசியான

### செல்லத்துரைப் பத்தர்

இவர் காலஞ்சென்ற திரு/திருமதி செல்லப்பா பத்தரின் அன்பு மகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரன், ராஜினி, ரஜனி, ரவிராயர், ரவீந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

காலஞ்சென்ற இரத்தினம், கந்தசாமி, பிரபலசோதிடர் செ. நடராஜா, துரையப்பா, திருமதி சண்முகம் சீதாலட்சுமியின் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பிரபல சோதிடர் செ. நடராஜாவின் 568/1, கே. கே. எஸ். வீதி (தட்டா தெரு). இல்லத்திலிருந்து 12-1-84 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

121

## மரண அறிவித்தல்

### நா. பாலகிருஷ்ண ஆச்சாரி

யாழ்ப்பாணம் 291, நாவலர் வீதி ஆனைப்பந்தியைச் சேர்ந்த நாகலிங்கம் பாலகிருஷ்ணன் ஆச்சாரி அவர்கள் காலமாகிவிட்டார் இவர் புனிதம்மாளின் அன்புக் கணவரும், தணிகாசலம் (ஜேர்மனி), கண்ணன் (ஈராக்), சக்திவேல் மீனலோஜனி, ஜானகி, ஜமுனா, உஷா, வத்சலா, ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 12-1 84 வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

120

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம், [illegible] வீதி, [illegible] 1984-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box, 49,Telephone, 22389 — 24126.